## September 28, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடு முழுவதும் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் 'சுதேசி' 4ஜி சேவையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.
   i. உள்நாட்டுத் தொழில்நுட்பம்- தொலைத்தொடர்பு சாதனங்களின் மூலம் இச்சேவை தொடங்கப்பட்டுள்ளது. சொந்தமாக தொலைத்தொடர்பு உபகரணங்களைத் இதன்மூலம் தயாரிக்கும் வெகுசில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.
   ii. டென்மார்க், ஸ்வீடன், தென்கொரியா, சீனா ஆகிய 4 நாடுகளே, சொந்தமாக தொலைத் தொடர்பு உபகரணங்களைத்தயா ரிக்கின்றன. இந்த வரிசையில் 5-ஆவது நாடாக இந்தியா இணைந்துள்ளது.
2. தென்கொரியாவின் குவான்ஜு நகரில் நடைபெற்ற பாரா உலக வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் ஷீத்தல் தேவி, டோமன் குமார் வெண்கலம் வென்றனர். காம்பவுண்ட் தனிநபர் பிரிவில் ஷீத்தல் தங்கம் வென்றார்.
3. குஜராத் மாநிலம் அகமதாபாதில் தொடங் கும் 11- ஆவது ஆசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சஜ்ஜன் பிரகாஷ், ஸ்ரீஹரி நட்ராஜ் உள்பட இந்தியாவில் இருந்து 40 பேர் அணி பங்கேற்கிறது. மொத்தம் 29 நாடுகளில் இருந்து 1100 பேர் பங்கற்கின்றனர்.
4. உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சைலேஷ் குமார் முதல் தங்கத்தைப் பெற்றுத் தந்தார்.
   i. புது தில்லியில் உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
   ii. இதில் ஆடவர் உயரம் தாண்டுதல் டி63 பிரிவில் சைலேஷ் குமார் 1.91 மீ உயரம் குதித்து தங்கம் வென்றார்.
   iii. பாரா ஆசிய முன்னாள் சாம்பியன் வருண் சிங் பாட்டி வெண்கலம் வென்றார்.
   iv. மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி, புது தில்லியில் தொடங்கியது.
5. தில்லியில் அக்டோபர் 3-ஆம் தேதி 'கௌடில்யா பொருளாதார மாநாட்டை' மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடங்கி வைக்கவுள்ளார்.
   i. உலகளாவிய பொருளாதாரச் சவால்கள் குறித்து விவாதித்து, நடைமுறைத் தீர்வுகளை அலசும் நோக்கில், மத்திய நிதியமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தால் (ஐஇஜி) கடந்த 2022- ஆம் ஆண்டில் இருந்து இம்மாநாடு நடத்தப்படுகிறது.
   ii. தற்போது நான்காம் ஆண்டு மாநாடு, தில்லியில் அக்டோபர் 3 முதல் 5 வரை நடைபெறவுள்ளது. 'கொந்தளிப்பான காலகட்டத்தில் வளமையைத் தேடுதல்' என்ற கருத்துருவில் நடைபெறும் இம்மாநாட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடங்கிவைக்கவுள்ளார். நிறைவு நாளில் இந்தியாவின் வெளியுறவு-பொருளாதார கொள்கைகளைப் பிரதிபலிக்கும் அமர்வில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பங்கேற்கவுள்ளார்.
6. நாடாளுமன்றக் குழுக்களின் பதவிக்காலத்தை 2 ஆண்டுகளாக நீட்டிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
   i. தற்போது நாடாளுமன்றக் குழுக்களின் பதவிக்காலம் ஓராண்டாக உள்ள நிலையில், அதை இரண்டாண்டுகளாக நீட்டிக்க உறுப்பினர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வரும் நிலையில் இதை மத்திய அரசு பரிசீலிக்கவுள்ளது. மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மற்றும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவுடன் கலந்தாலோசித்தபின் இதுதொடர்பான இறுதி முடிவு மேற்கொள்ளப்படவுள்ளது.

ii. மக்களவைத் தேர்தல் முடிந்து புதிய உறுப்பினர்கள் பதவியேற்றவுடன் கட்சிகளிடம் ஆலோசனை நடத்தப்பட்டு நாடாளுமன்ற குழுக்கள் அமைக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் அவர்களது உறுப்பி னர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு பல்வேறு குழுக்களில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது.

iii. இந்தக் குழுக்களின் பதவிக்காலம் தற்போது ஓராண்டாக உள்ளது. இதனால் குழுக்களின் பரிந்துரைக்கு அனுப்பப்படும் மசோதாக்களை விரிவாக ஆய்வுசெய்து திருத்தங்கள் மேற்கொள்வதில் சிக்கல்கள் எழுவதால் பதவிக்காலத்தை இரண்டாண்டுகளாக நீட்டிக்க எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றன. இந்நிலையில், பதவிக்காலத்தை நீட்டிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

iv. தற்போது நாடாளுமன்றத்தில் 24 துறைசார் நிலைக்குழுக்கள் உள்ளன. இவற்றில் 16 குழுக்களுக்கு மக்களவை உறுப்பினர்களும் 8 குழுக்களுக்கு மாநிலங்களவை உறுப்பினர்களும் தலைமை வகிக்கின்றனர்.

7. சென்னை தரமணி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்வில் அவரது உருவப் படத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

i. அதுவும், இந்த ஆண்டு பட்ஜெட்டில், வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ‘டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி உருவாக்கப்படும் என்று அறிவித்து, அதற்காக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

8. சென்னை கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் உள்ள தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) கருத்தரங்க அரங்கத்தில் சர்வதேச காதுகேளாதோர் தினம், இந்திய சைகை மொழிவார நிகழ்ச்சி நடைபெற்றது.

i. நிகழ்வுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத் துறை முன்னாள் இயக்குநர் கே.தீனதயாளன் தலைமை வகித்தார். காது கேளாத மற்றும் பேச இயலாத மாற்றுத்திறனுடையோர் பாதுகாப்பு அமைப்பின் நிறுவனர் எஸ்.அப்துல் லத்தீப் முன்னிலை வகித்தார்.

9. முகலாய பேரரசு காலத்தில் கட்டமைக்கப்பட்ட உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ் மஹால், 2024-25-இல் உள்நாடு மற்றும் வெளிநாட்டு பயணிகளால் அதிகம் பார்வையிடப்பட்ட சுற்றுலாத் தலமாக உள்ளதாக மத்திய அரசு தெரிவித்தது.

i. உலக சுற்றுலா தினத்தை யொட்டி (செப்.27) நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் குறித்த அறிக்கையை மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் வெளியிட்டது.

ii. அதில் கூறப்பட்டிருப்பதாவது: 2024-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 99.5 லட்சமாகும். இது 2023-ஐ விட 4.52 சதவீதம் அதிகம். மத்திய அரசால் பாதுகாக்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்படும் சுற்றுலா தலங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளால் அதிகம் பார்வையிடப்பட்ட தலமாக தாஜ் மஹால் உள்ளது.

iii. உள்நாட்டுப் பயணிகள் 62.6 லட்சம், வெளிநாட்டுப் பயணிகள் 6.4 லட்சம்பேர் தாஜ் மஹாலை பார்வையிட்டுள்ளனர். தாஜ்மஹாலுக்கு அடுத்தபடியாக ஒடிஸாவில் உள்ள கோனார்க் சூரிய கோயிலை 35.7 லட்சம், குதுப் மினாரை 32 லட்சம் உள்நாட்டுப் பயணிகள் பார்வையிட்டுள்ளனர்.

iv. அதேபோல் ஆக்ரா மற்றும் குதுப் மினாரை தலா 2.2 லட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பார்வையிட்டுள்ளனர்.

10. சவூதி அரேபியாவுடனான நல்லுறவை பாதுகாப்பு ஒப்பந்தம் உறுதிப்படுத்தியுள்ளதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிஃப் தெரிவித்தார்.
    i. அண்மையில் சவூதி அரேபியாவுக்குச் சென்ற பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை அந்நாட்டு பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகமது பின் சல்மானுடன் மேற்கொண்டார். அதன்படி, பாகிஸ்தான்-சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளில் எந்த நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், அது மற்றொரு நாட்டின் மீதும் மேற்கொள்ளப்பட்டதாகவே கருதப்படும் என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
    ii. இந்தியாவுக்கு எதிராக சவூதி அரேபியாவை தங்களுடன் கூட்டு சேர்க்கும் நோக்கில் இந்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளதாக கருதப்படுகிறது.
    iii. இந்த ஒப்பந்தம் குறித்து ஊடகத்துக்கு பேட்டியளித்த கவாஜா ஆசிஃப், 'கத்தாரில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதன் எதிர்வினையாக சவூதி அரேபியா-பாகிஸ்தான் பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கருத முடியாது.